

தமிழ்ச் சுவடிகள்

(அட்டவணை)

யாதும் ஊரே யாவரும் கேளிர்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழக

தமிழ்ச் சுவடிகள் அட்டவணை

பதிப்பாசிரியர்

இரா. நிர்மலாதேவி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

டி. டி. டி. ஐ. தரமணி.

சென்னை-600013

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	TAMIL CUVADIGAL ATTAVANAI
Editor	:	R. Nirmala Devi, M.A., Dip. in Epigraphy & Archaeology, Dip. in Manuscriptology. I. I. T. S. Madras-113
Publication Number	:	79
Language	:	**Tamil**
Edition	:	**First**
Date of Publication	:	September 1983
Paper Used	:	16 Ks. D/Demy White Printing
Size of the book	:	21×18 Cms
Printing types used	:	10 Point
Number of Pages	:	xviii+111
Number fo copies printed	:	1200
Price	:	(Rs.6/-) Rupees Six only
Printers	:	Ponmani Art Printers 6, Theetharappa Mudali St, Triplicane Madras-600 005
Binding	:	Card Board
Artist	:	Amudhone
Subject	:	Catalogue of Tamil Manuscript in Oriental Manuscripts Library Trivandrum.

முன்னுரை

டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்

இயக்குனர்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 'சுவடிப் பயிற்சிக்' கல்வியைத் தொடங்கி நான்கு ஆண்டுகள் ஆகின்றன. டாக்டர் உ. வே .சா. வுக்குப் பிறகு சுவடிகளைப் படித்து, பதிப்பித்து வெளியிடுகின்ற ஆற்றல் உடையவர்கள் குறைந்து விட்டார்கள். பெரும்பாலும் இல்லை என்றுகூடச் சொல்லலாம். அந்தக் குறையைப் போக்கு வதற்காக நிறுவனத்தில் சுவடிப்பயிற்சி தொடங்கப்பட்டது.

உலகம் முழுவதும் தமிழ்ச் சுவடிகள் கிடைக்கின்றன. உத்தேச மாக இன்னும் அச்சில் வரவேண்டிய நூல்கள் மட்டும் 50 ஆயிரத்திற்கு மேல் இருக்குமோ என்று தோன்றுகிறது. இந்தியாவிலும் பல பாகங்களில் தமிழ்ச் சுவடிகள் கிடைக்கின்றன. கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடி நிலையத்தில் (Oriental Manuscripts Library) 5000 சுவடிகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டு அதில் கணக்கின் படி 3280 தமிழ்ச்சுவடிகள் இருக்கின்றன. அதில் என்னென்ன சுவடிகள் இருக்கின்றன என்பதைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து வருவதற்காக ஓர் ஆய்வாளர்அங்கிருந்து வேலை செய்துகொண்டிருக் கிறார். அவர் நன்கு முயன்று 1091 சுவடிகளுக்குரிய விவரங்களைத் தந்துள்ளார். அது இப்போது வெளிவருகிறது.

அடுத்தாற்போன்று கேரளப் பல்கலைக் கழகத்தில் உள்ள தமிழ்ச் சுவடிகளின் விவரப்பட்டியல் அல்லது விவர அட்டவணை என்ற நூல் விரைவில் வெளிவரும். இதனால் தமிழ்ச்சுவடிகள் இன்னும் அச்சா காமல் இருப்பவை எவை என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இது துணை புரியும்.

நிறுவனத்தின் சார்பில் அச்சாகாத பல தமிழ்ச்சுவடிகள் நூலாக வெளியிடப்பட்டுள்ளன. அட்டவணை செய்யும் வேலையும் இப் போது செய்யப்பட்டு வருகின்றது. இதில் முதல் முதலாக இந்த நூல் வெளிவருகின்றது. இதனைச் செவ்வையாக உழைப்புடன் செய்த செல்வி நிர்மலாதேவியைப் பாராட்டுகிறேன். இன்னும் ஏனைய தமிழ்ச் சுவடிகளுக்குப் பட்டியலை விரைவில் செய்து தருவார் என்று நம்புகிறேன். இதற்குத் துணைபுரிந்த நிறுவனச் சுவடிப்பயிற்சி ஆய்வாளர் அனைவர்க்கும் என்னுடைய அன்பு கலந்த நன்றி.

விவர அட்டவணையை நன் முயற்சியோடு செய்து தந்த பொன்மணி அச்சகத்திற்கு நன்றி உடையேன்.

நிறுவனப்பணிகள் அனைத்திற்கும் ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

ச. வே. சுப்பிரமணியன்

நன்றியுரை

திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக் கழகத் தமிழ்ச் சுவடிகளின் அட்டவணையைத் தயாரிக்க வாய்ப்பேற்படுத்திக் கொடுத்து, வெளியிடுவதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்தளித்த எமது நிறுவன இயக்குனர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களுக்கு முதற்கண் என் மனமார்ந்த நன்றியைச் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

தமிழ்ச் சுவடிகளின் அட்டவணை தயாரிப்பிற்கு அனுமதி அளித்து, இருக்கை வசதியும் ஈந்து, இத்தயாரிப்பில் பேரார்வமும் காட்டிய கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நிலைய முன்னாள் இயக்குனர் டாக்டர் இராகவன்பிள்ளை, தற்போதைய இயக்குனர் டாக்டர். பாஸ்கரன் ஆகியோருக்கு என் இதயபூர்வமான நன்றியை இயம்பிக் கொள்கிறேன்.

அட்டவணை அமைப்பு முறைக்குதவிய நிறுவனச் சுவடிப் பொறுப்பாளர் திரு.மு.கோ. இராமன், ஆசிரியப் பெருந்தகை திரு.வே.இரா. மாதவன் ஆகியோருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

எந்த நேரத்தில் எத்தனை சுவடிகள் வேண்டும் என்று எழுதிக் கொடுத்தாலும் இனிய முகத்தோடு அக்குறிப்பை வாங்கி, ஏடுகள் பெற்றுத்தந்த பி. சதாசிவம்போற்றி, பி.எல். ஷாஜி ஆகிய இருவருக்கும் என் இனிய நன்றி.

சுவடி எண்களை எழுதிக் கொடுத்து விட்டால், எட்டா 'உயரத்தில் இருந்தாலும்' ஏணி ஒடிந்து, ஏறி எடுக்கவும் இயலாத சூழலிலும், எப்படியோ எடுத்து, சுமக்க மாட்டாமல் சுமந்து வந்து என்முன் அடுக்கி வைத்து விடும் ஏலியாம்மா, தேவகி என்போருக்கும் எனது நன்றி என்றென்றும் உரியது.

சிறப்பான முறையில் அச்சிட்ட பொன்மணி அச்சகத்துக்கும், அட்டைப்படம் அளித்த அமுதோனுக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன்.

இரா. நிர்மலாதேவி

பதிப்பாசிரியர் முன்னுரை

கேரளமும் தமிழும்

மலை நாடான கேரளம் தன் தாய் மொழியான மலையாளத்தைக் கொண்டிருப்பினும், தமிழுக்கும், அதற்குள்ள பல்லாண்டுத் தொடர் புக்கும் விளக்கமாகத் தமிழ்ச் சுவடிகள் பலவற்றைத் தன்னகத்துக் கொண்டுள்ளது.

முத்தமிழ்க் காப்பியமும், சேரமான் பெருமாள் ஞான உலாவும் பிறந்த சேர நாட்டில், மலையாள மன்னர்களுக்கு அவ்வப்போது தமிழின் பெருமையை உணர்த்தி, மலையாளத்தோடு தமிழையும் தழுவி ஆதரிக்கச் செய்த தமிழறிஞர்களை வரலாறு நமக்குக் காட்டுகின்றது.

திருவனந்தபுரம் சமஸ்தானாதிபதி ஒருவர் வடமொழியில் மிகு விருப்புடையராய், தமிழை, தமிழ் வித்துவான்களைப் புறக்கணித்த மையை அறிய வந்த திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த தம்பி ரான் அம்மன்னரை உரிய முறையில் சந்தித்து, தக்கனவற்றை எடுத்து விளக்கித் தமிழையும் போற்றச்செய்த வரலாற்றை டாக்டர் உ. வே. சா. அவர்களின் ''நான் கண்டதும் கேட்டதும்''—நூலிலுள்ள ''தமிழ் தந்த வளம்'' கட்டுரையில் காண முடிகின்றது.

இத்தகு நிகழ்ச்சிகளின் பின்னணியில் தமிழ்ச்சுவடிகள் அரசு ஆதர வோடு திரட்டிச் சேர்க்கப்பட்டு அரண்மனையில் கொலு வைக்கப் பட்டன.

குடியாட்சி மலர்ந்தபோது கேரளப் பல்கலைக் கழகத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பட்டன.

கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம்

இந்தியாவிலுள்ள சுவடி நூலகங்களில் குறிப்பிடத்தக்க இடம் பெறும் இந்நூலகத்தில் சுமார் 60,000—க்கும் மேற்பட்ட சுவடிகள் உள்ளன. எண்ணிக்கையில் சமஸ்கிருத, மலையாளச் சுவடிகள் முதலிடம் வகிக்கின்றன. தமிழ், தெலுங்கு, கன்னடம், மராட்டி, உருது, இந்தோனேஷியன், பர்மியன் ஆகிய மொழிகளில், எழுத்து களில் தேவநாகரி, கோலெழுத்து, வட்டெழுத்து, கிரந்தம், ஆங்கிலம் முதலிய எழுத்துகளோடும் ஏடுகள் எழுதப்பட்டுள்ளன.

தோல், துணி, பூர்ஜ மரப்பட்டை, செப்பேடுகள், நாணயங்கள் என்பவற்றில் எழுதப்பட்டவைகளையும் தொகுத்து வைத்துள்ளனர்.

607 ஆண்டு வயதுள்ள (1376-A.D) ஸ்தோத்திரங்கள்-சுவடி எண் 15880 (மலையாளம்) என்பது மிகப் பழமையானதாகத் தெரிகின்றது.

உருத்திராட்ச மாலை வடிவத்திலுள்ள (15மணிகள் கொண்டது) ஏட்டையும், சுருணை வடிவத்தில் பண்டு ஏகிப்தில் பாப்பிரஸ்

தாள்களில் எழுதிச் சுருட்டி வைத்தது போலப் பனை ஓலைகளில் எழுதிப் பெரும் கட்டாகச் சுருட்டி வைத்துள்ளனர்) அமைந்துள்ள பஞ்சாங்கம்—8270—a(தமிழ்) சுவடியையும் பார்க்க முடிகின்றது.

எழுத்து, படங்கள், வண்ண ஓவியங்கள் போன்றன நுணுக்கமான கலைநயத்தோடு, தந்த, பொன்னிற வேலைப்பாடுகளில் எழுதப் பட்டுள்ளதில் சிறந்த இடம் வகிக்கும் ஏடுகளும் இங்கு இடம் பெற்றுள்ளன.

ஓலையில் எழுத்தாணியால் அல்லது மையால் எழுதப்பட்ட ஏடுகளும் இருக்கின்றன.

இடவசதியின்மையால் நேர்ந்த அல்லலை நீக்கிக் கடந்த ஆண்டு சுவடி நூலகத்துக்கெனத் தனிக் கட்டிடம் நிறுவி, சுவடிகள் வைக்கும் அறையைக் குளிர்சாதனம் செய்து பாதுகாத்து வருகின்றனர்.

நோக்கம்

இந் நூலகத்திலுள்ள தமிழ்ச்சுவடிகளைத் (சுமார் 5000-க்கு மேல்) தமிழுலகுக்கு அறிமுகம் செய்யும் முகத்தானே முதன் முதலாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் இச்சுருக்க அட்டவணை வெளியிடப் படுகின்றது. அங்குத் தமிழ்ச் சுவடிகள் உள்ளன என் பதும், அதுவும் இந்த அளவுக்கு எண்ணிக்கையில் மிகுந்துள்ளன என் பதும் இதுவரை அறியப்படாமலிருந்தது.

தற்பொழுது முதல் தொகுதியாக வெளிவரும் இதனைத் தொடர்ந்து, இரண்டாம், மூன்றாம் தொகுதிகளும் வெளியாக உள்ளன. இறுதியில், அனைத்துச் சுவடிகளின் விவர அட்டவணை யையும், முழு விளக்கங்களுடன் பதிப்பிக்கவும் முயற்சி நடந்து கொண்டிருக்கின்றது.

எடுத்துக் கொண்ட சுவடிகளின் வகை

ஓலையில் எழுதப்பட்ட சுவடிகள் மட்டுமே இச்சுருக்க அட்ட வணை இடப் பயன்படுத்தப்பட்டன. 'காகிதச் சுவடிகள்' (Paper Manuscripts) எடுத்துக் கொள்ளப்படவில்லை.

பனை ஓலையில் (Palmyra leaves) எழுதப்பட்டனவும், '*சீதாளம்*' எனப்படும் (Large palm leaves of the talipot tree) *சீதாளப்* பனை ஓலையில் எழுதப்பட்டனவும் இச்சுவடி அட்டவணையில் இடம் பெற்றுள்ளன.

அட்டவணை அமைத்துள்ள முறை

இம் முதல் தொகுதியில் 1091 ஏடுகளுக்கு அகரவரிசையில் சுருக்க அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளன.

அட்டவணையில் முதற்கண் வரிசை எண்ணும், அடுத்து நூலின் பெயரும், சுவடி எண்ணும் தரப்பட்டுள்ளன.

சுவடி எண்கள் பெரும்பான்மையும் புதிய எண்களே. மிகச்சில இடங்களில் பழைய எண்கள் இடம் பெற்றுள்ளன. அவை அவ்வவ் விடங்களில் 'Old No'. எனக் குறிப்பிடப் பட்டுள்ளன.

ஒரு சுவடிக் கட்டில் ஒன்று முதல் இருபது நூல்கள் வரை அடங்கி இருத்தல் உண்டு. அப்போது அவை எண்ணுடன் a,b,c,d என்ற ஆங்கில எழுத்துகள் மூலம் வேறுபடுத்தப் பட்டுள்ளன.

நூலின் பெயர்

பெரும்பான்மையும் சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ள முறை கொண்டே நூலின் பெயர்கள் இடப்பட்டுள்ளன. பொதுவாக, சுவடி களில் தலைப்புக் குறிப்பிடும் முறைகளில் ஆறு வழிகளைக் காண முடிகின்றது.

1. சுவடிகளின் தனித்த முதல் இதழின் நடுவில் சுவடித்தலைப் பைப் பொறித்தல்.
2. சுவடி தொடங்கும் அடுத்த பக்கத்தின் இடது ஓரப்பகுதி யில் எழுதுதல். இதில் ஹரிஓம், நன்றாக குரு வாழ்க, குருவே துணை என்று எழுதியிருப்பனவற்றினை அடுத்து, அதன் கீழும் எழுதியிருத்தலைக் காணலாம்.
3. உரை நடையில் அல்லது செய்யுள் வடிவில் தொடங்கும் நூலின் முதல் வரியில் குறிப்பிடல்.
4. முதற்பாடல் கடவுள் வாழ்த்தாக (காப்புச் செய்யுள்) அமைந் திருப்பின், இரண்டாம் பாடலிலும், முதல் மூன்று பாடல்கள் வரை விநாயகர், சரஸ்வதி, சிவன் அல்லது சக்தி அல்லது குரு வணக்கங்கள் இடம் பெற்று, அடுத்து அவையடக்கம் போன்றவையும் அமைத்திருப்பின் ஐந்து அல்லது ஆறாம் பாடலிலும் நூல் தலைப்புக் காணப்படல் உண்டு.
5. நூலின் இறுதியில், இறுதிப்பாவில், இறுதிவரியில், 'இத்தகு பெயர் கொண்ட நூல் முற்றுப் பெற்றது' என்று தலைப்புக் குறிப்பிடல் உண்டு.
6. மேற்கூறிய ஐந்து பொதுவான முறைகள் தவிர சில ஏடுகளில் இடையில், ஏதேனும் ஒரு பாடலிலோ, உரைநடை யாயின் ஏதேனும் ஒரு வரியிலோ, பாடலின் தலைப்பைப் புலப்படுத்தும் முறையில் குறிப்பு அமைந்திருத்தலைக் காண இயலும்.

சான்று

சுவடி எண் 5913-இல் ''குருவான தீட்சை குறியானவாறும்'' என்பது கொண்டு ''மச்சமுனி தீட்சை'' எனத் தலைப்பறிதல்,

தலைப்புக் காணப்படாத போது கையாண்ட முறை

பொதுவாக ஏட்டின் ஓரம், முதல், இறுதி இதழ்களிலேயே தலைப்பு அமைந்துள்ளதால், பெரும்பாலும் அவை முறிந்து விடவும், பூச்சி அரிப்பால் எளிதில் பாதிக்கப்படவும், ஒடிந்தும், சிதைந்தும் விடவும், அழுக்கேறி எழுத்து மங்கி விடவும் நிறைய வாய்ப்புகள் உள்ளன.

சுவடி குறிப்பிட்ட ஒரு பொருண்மையைக் குறித்த திரட்டாக, தொகுப்பாக (சோதிடம், மருத்துவம் போன்றவை) இருந்தாலும்: பெரும்பாலும் தலைப்புக் காணப்படுவதில்லை.

இத்தகு காரணங்களால் தலைப்புக் காணப்படாத பொழுது, பொருண்மையின் முழுமையை அடிப்படையாக வைத்துத் (வைத்தியத் திரட்டு, சோதிடத்திரட்டு, பலபிணி மருந்துகள், மருந்து முறை, மருந்து யோகங்கள், பல சாஸ்திரம் என இவ்வாறு) தலைப்புத் தரப்பட்டுள்ளது.

தலைப்பில் செய்த சில ஒழுங்குகள்

பெரும்பான்மையும் ஏட்டில் காணப்பட்ட தலைப்பே எழுதப் பட்டுள்ளது.

1. சில ஏடுகளில் தலைப்பு நீளமாக இருக்கும் பொழுது பொருள் மாறுபடாத வகையில் சுருக்கி அமைத்தல். ('அகத்தியர் நாயனார் அருளிச் செய்த வைத்திய சிந்தாமணி' என்பதனை 'அகத்திய நாயனார் வைத்திய சிந்தாமணி' அல்லது 'அகத்தியர் வைத்திய சிந்தாமணி' என அமைத்தல்)

2. தலைப்பில் அமைந்துள்ள பேச்சு வழக்கு நடையினை இலக்கிய நடையாக ஆக்குதல் (அகத்தியர் வைத்தியம் நூற்றஞ்சு' என்பதை 'அகத்தியர் வைத்தியம் நூற்றைந்து, என இவ்வாறாக அமைத்தல்)

3. ஏட்டில் முதல், இறுதி என்ற இரு இடத்திலும் தலைப்பமைந்து, அவை இரண்டும் ஒரே மாதிரியாக அன்றி, வெவ்வேறு முறையிலும் அமைதலுண்டு. அப்போது ஏதேனும் ஒரு தலைப்பை வைத்துக் கொண்டு மற்றதை அடைப்புக் குள்ளிடல். (அகத்தியர் வைத்தியம்-கலைக்கியானம் - 2135) குணவாகடம் (அகத்தியர் பாடல் 6295-d-)என்பன போன்றவற்றைச் சான்றுகளாகக் கூறலாம்.

4. நூல் தலைப்பில் உள்ள சூத்திர எண்ணிக்கை அல்லது செய்யுள் எண்ணிக்கை தமிழ் எண்ணில் எழுதப்பட்டிருக்கும். அவற்றை எழுத்தால் எழுதுதல். (அகத்தியர் பரிபாஷை ருஎ- 6255 என்பதை அகத்தியர் பரிபாஷை ஐந்நூறு என இவ்வாறு எழுதுதல்)

அளவு

சுவடியின் நீள அகலங்கள் செ.மீட்டரில் தரப்பட்டுள்ளன. ஒரே தலைப்புடைய குறிப்பிட்ட ஏடு ஒரே அளவின்றி இரண்டு (மாரண சக்ரம் ஆதி -8243) மூன்று (மந்திர யந்திரங்கள் 6239) அளவுடைய இதழ்களைக் கொண்டதாக இருத்தலும் உண்டு. அப்போது அவ்வெவ் வேறு அளவுகளும் ஒன்றன்பின் ஒன்றாகத் தெளிவுறுத்தப் பட்டுள்ளன.

அ. நிலை

இந்நூலகத் தமிழ்ச் சுவடிகளில், பூச்சி அரிப்புச் சிறிதும் இல்லாத, நன்னிலையில் உள்ள ஓர் ஏட்டினைக் காண்பது மிக அரிது.

பெரும்பான்மையான ஏடுகள் சிதைவுடனும் முனை முறிவு களுடனும் காணப்படுகின்றன. ஒட்டிக் கொண்டிருக்கும் இரு இதழ் களைப் பதனமாகப் பிரித்துப் பார்த்தால் ஏழெட்டுப் புழுக்கள் அதனின்று உதிர்வதையும் காண முடிந்தது.

இவ் அட்டவணையில் 'நன்று' என்று குறிப்பிடப்பட்ட ஏடு பூச்சி அரிப்பால் சிறிது பாதிக்கப்பட்டது என்பதனையும், 'சிறு சிதைவு' என்று தெரிவிக்கப்பட்ட சுவடி பரவலாகச் சிதைவுற்றது என்பதனையும், 'சிதைவு' என்பது மிகுதியும் சிதைந்து, படித்தால் முழுப்பயனை நல்க இயலாதது என்பதனையும், 'மிகுசிதைவு' என்பது ஏட்டினை வாங்கிக் கையில் பிரித்துப் பார்க்கவும் உகந்த தன்று என்பதனையும் குறிக்கும்.

ஆ. முழுமை, குறை

ஏடு முழுமை பெற்றதா என்பது பெரும்பான்மையும் ஏட்டின் இறுதி இதழில் உள்ள குறிப்புகளை அகச்சான்றுகளாகக் கொண்டு உறுதி செய்யப்பட்டது.

1. ஏட்டின் இறுதி வரியில் அமையும் 'முற்றும்' 'முற்றியது' 'முதிர்ந்தது' 'குருவே துணை' என்ற குறிப்புகள் மூலம் முழுமையை அறிதல்.
2. இறுதி இதழில் உள்ள, 'இவ்வேடு காக்க' வேண்டும், இவ் வேட்டினை எடுப்பவர் திருப்பிக் கொடுத்துவிடவும். இச் சுவடியை வாசிப்பவர் இன்ன பயனை அடைவர். இதற்கு ஊறு செய்வார் இன்ன தீப்பயனை எய்துவர் என்ற இத்தகு குறிப்புகள் கொண்டு ஏட்டின் முழுமையைத் தீர்மானித்தல்.
3. நூல் பெயரில் குறிப்பிட்டபடி சூத்திரம் அல்லது பாடல் எண்ணிக்கை சரியாக உள்ளதா எனக் கண்டு முழுமையை உணர்தல். (அகத்தியர் சூத்திரம் நூற்றிருபது, உரோமரிஷி பதினாறு)

4. பொருண் முடிவு நோக்கி முழுமையை அறிதல்.

5. பொதுவாக ஏட்டிறுதியில் அமையும், ஏட்டை எழுதி முடித்த காலம், மூல ஆசிரியர் அல்லது படி எடுத்தவர் பெயர் அல்லது இன்னாருக்காக இது எழுதப்பட்டது என்ற குறிப்பு ஆகிய வற்றை வைத்து ஏடு முடிந்ததை அறிதல்.

இவ்வைந்து வழிகளாலும் அறிய இயலாத பொழுது, 'அச்சானது என்றால் 'அதனோடு ஒப்பிட்டுப் பார்த்து அறிதல்' என்பதனைப் புறச்சான்றாகக் கொண்டும் ஏட்டின் முழுமை அறியப்பட்டது.

இதே சான்றுகளைக் கொண்டு, முன்புறம் தொடக்கம் இல்லா திருந்தாலும், இறுதி ஓலை மிகுந்த சிதைவை அடைந்திருந்தாலும் குறை என்று உணரப்பட்டது. திரட்டாயின் முழுமையா? குறையா? என அறிய இயலுவதில்லை. ஒன்றிலும் அடங்காமல் ஐயம் தருவன வினாக் குறியுடன் எழுதப்பட்டுள்ளன.

செய்யுள் எண்ணிக்கை

முழுதும் செய்யுளாக அமைந்ததற்கும், செய்யுள், அதனை அடுத்து உரை என்ற அமைப்பில் உள்ள 'இரண்டு முளது' என்ற வரிசையில் உள்ளனவற்றிற்கும் செய்யுள் எண்ணிக்கையில் ஓரளவு நிறைவேற்றப் பட்டுள்ளது. இவற்றுள்ளும் ஐயம் உள்ளனவற்றின் எண்ணிக்கை ஐயவினாக் குறியுடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

பின்வரும் காரணங்களால் பல சுவடிகளுக்குச் செய்யுள் எண்ணிக்கை தர இயலாத நிலை ஏற்பட்டது.

1. ஏடு மிகுதியும் சிதைந்திருத்தல்.
2. ஏட்டின் இடையிடை இதழ்கள் காணாமல் போயிருத்தல்.
3. சுவடி குறிப்பிட்ட பொருண்மையுடைய சிதறல்களின் தொகுப் பாக அமைந்திருத்தல்களின் தொகுப்பென அறிவது, பக்க எண் தொடர்ச்சியாக இல்லாதது கொண்டுமாகும் (தக்ஷிணா மூர்த்தி குணவாகடம் -9206-k.)
4. விரவியது (செய்யுள் அதன் உரை; அடுத்து ஒரு செய்யுள் அதன் உரை என்ற அமைப்பு) வரிசையில் அடங்கும். ஏட்டில் அங்கொன்றும், இங்கொன்றுமாகப் பாடல் அமைந்திருத்தல். (சான்று; நட்பாட்சி யுச்சம் -6356-d)
5. தொடர் பாடலாக எழுதப்பட்டிருத்தல். (பெரும்பான்மை அகவல் அமைப்புடையன.) நாட்டுப்புறப்பாடல்கள் கதை, நொண்டி நாடகம், கும்மி , அம்மானை போன்றவை தொடர் செய்யுள் வடிவில் இயற்றப்பட்டிருப்பதைக் கூறலாம்.

6. ஏட்டில் செய்யுள் எண்ணிக்கையை எழுதி வருதலில் பல பிழைகள் காணப்படலை அறிதல்.

7. தெரிவுகளாயின் (இலக்கியங்களினின்றும் சில பாடல்களைத் தெரிந்தெடுத்தெழுதல்) செய்யுள் எண்ணிக்கையை அறிய இயலுவதில்லை.

இவ்வாறு பல இடர்ப்பாடுகள் உள்ளதால் ஏடுகளின் எண்ணிக்கையும் செய்யுள் எண்ணிக்கையும் தெளிவாகத் தெரிந்தவை தவிரப் பிறவற்றுக்கு அளிக்கவில்லை.

குறிப்புகள்

இப்பகுதி மேற்குறிப்பிட்ட பகுதிகளில் சுருக்கமாகக் குறிப்பிட்டவற்றை விளக்கிக் கூறவும், குறிப்பிட்ட ஏட்டினைக் குறித்த பிற விவரங்களைத் தெளிவுறுத்தவும் பயன்படுத்தப் பட்டுள்ளது.

வரிகள்

ஏடுகளின் ஒவ்வொரு பக்கமும் 4 முதல் 9 வரையிலான வரிகளைக் கொண்டுள்ளன. (விதிவிலக்கு : சாமுத்திரிகா லக்ஷணங்கள். பக்கத்துக்கு 20 முதல் 40 வரிகள்) இந்நிலையே பல ஏடுகளிலும் பொதுவாக அமைவதால் இவ்வெண்ணிக்கையை ஒவ்வொரு சுவடிக்குமெனத் தனித்தனியே இந்த அட்டவணையில் குறிக்கவில்லை. வெளியாகவிருக்கும் விளக்க அட்டவணையில் இவை கொடுக்கப்பட இருப்பதாலும் இச்சுருக்க அட்டவணையில் விவரிக்கவில்லை.

ஏட்டின் காலம்

ஏடு பிரதி செய்யப்பட்ட காலம் இருந்ததெனில் அது இடம் பெற்றுள்ளது.

ஒரு சுவடியைப் படி எடுக்கும் போது, நன் முகூர்த்தம் பார்த்துத் தொடங்கியும், முடித்தும் உள்ள, பக்தியால் விளைந்த நற்பழக்கத்தால் நமக்கு இன்று குறிப்பிட்ட ஏடு எழுதப்பட்ட காலத்தை அறிய முடிகின்றது.

1. தொடங்கிய காலம் ஏட்டின் முதல் இதழிலும்' முடிந்த காலம் இறுதி இதழிலும் இடம் பெறுகின்றன (சான்று: அமிர்த மதன நாடகம் - 8227. இதன் மூலம் குறிப்பிட்ட ஏட்டை எழுதி முடிக்க எத்தனை காலம் பிடித்தது என அறிய இயலுகின்றது.)
2. தொடங்கிய காலம் இல்லாது, இறுதி இதழில் முடிந்த காலம் மட்டும் குறிக்கப்படலையே பெரும்பான்மையாகக் காண முடிகின்றது.
3. ஆண்டு, மாதம், தேதி, கிழமை, நன் முகூர்த்தவேளை என்ற முறையில் காலக் குறிப்பு அமைந்துள்ளது.

இதில் ஆண்டு, மாதம், தேதி என்ற முதல் மூன்று மட்டும் இடம் பெறலையே பெரும்பான்மையான ஏடுகளில் பார்க்க முடிந்தது.

4. கொல்லம் ஆண்டு குறிக்கப்படலை மிகுதியான ஏடுகளிலும், தமிழ் ஆண்டு, மாதம், நாள் குறிக்கப்படலைச் சில ஏடுகளிலும், இரண்டு ஆண்டுகளும் (கொங்கண சுவாமி ஐந்நூற்றுத் திரட்டு -5909) இடம் பெறலை மிக அரிதாகவும் காண முடிகின்றது.

இதில் ஆண்டு, மாதம், தேதி என்பன இவ்வாறு எழுத்தால் எழுதப்படாது ஏட்டில் வழங்கும் குறியீடுகள் மூலமாகவே காட்டப் பட்டுள்ளன. முறையே, என இவ்வாறு காணப்படும்.

௵ — ஆண்டு,
௴ — மாதம்,
௳ — தேதி.

இவற்றையே ஆண்டு, மாதம், தேதி என எழுத்தால் எழுதியுள் ளேன்.

கொல்லம் ஆண்டுக்கு கிறிஸ்துவ ஆண்டு என்ன என்பதனை கொல்லம் ஆண்டோடு 825- ஐக் கூட்டக் கிடைக்கும். அவ்வவ்விடத் தில் அடைப்பில் குறிப்பிட்டுள்ளேன்.

படி செய்த ஆசிரியர்

'படி' எடுத்த ஆசிரியர் பெயர் குறிக்கப்படலில் பொதுவாக 6 முறைகளைக் காண முடியும்.

1. இன்ன ஊரிலிருந்து வந்து இன்ன ஊரிலிருக்கும், இன்ன தெருவிலுள்ள இன்னார் மகனாகிய இன்னாரின் மகன் இன்னாருக்காக எழுதியது என்ற முறையில் விரிவாகக் குறிப் பிடல்.
2. இன்னார் மகன் இன்னார் எழுதியது எனல்.
3. தந்தை பெயர் குறிப்பிடாது முதலெழுத்துடன் (Initial) எழுதிய வர் பெயர் குறிப்பிடப்படல். (ஜோதிஷ பல சாஸ்திரம்-7944)
4. இன்ன ஏடு பார்த்து இன்னார் வாசிக்க இன்னார் எழுதியது எனல்.
5. இன்னார் பாட அல்லது சொல்ல இன்னார் எழுதியது எனல். (முத்தாரம்மன் கதை-8427 இருளணைஞ்ச பெருமாள் வில்லில் பாடியதை அருணாசலப்புலவனாகிய நான் ஏட்டில் எழுதியதாக.)

6. இன்னாரது ஏடு இது எனல்.

என்ற இவ்வாறு முறைகளோடு படி எடுத்த ஆசிரியர் பெயரை அறிய முடிகின்றது.

இதில் ஆறாவதாக இடம் பெற்றுள்ள 'இன்னாரது ஏடு' என்ற குறிப்பு மூலம் (இது பெரும்பான்மை ஏட்டின் தனித்த தலை இதழில் இடம் பெறல் உண்டு.) தனக்கெனப் படி எடுத்துத் தானே சொந்தமாக வைத்திருக்கலாம்; அல்லது இவரது சொந்தப் பயனுக்கென வேறு ஒருவர் படி எடுத்தும் கொடுத்திருக்கலாம் (தட்சிணாமூர்த்தி கர்ம காண்டம்-8846-a) எனக் கொள்ள இடமுள்ளது.

பிற கருத்துகள்

குறிப்புகள் பகுதியில் அமையும் கருத்துகள் அவ்வவ் ஏட்டின் தனித் தன்மைகளை விளக்குவனவாக அமையும்.

1. எழுத்தமைதி, பொருளமைதி, சுவடியிலுள்ள செய்திகளை ஓரளவு உணர உதவும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளன. (மருத்துவம், சோதிடம் போன்றன.)
2. வேறுபட்ட மொழி, எழுத்தெனில் அதனைப்பற்றித் தெளிவுறுத்தல்.
3. குறிப்பிட்ட ஏடு முன்னரே பதிப்பிக்கப்பட்டிருந்த தெனில், அச்சானது என அளித்தல் என்னும் இவற்றைச் சான்று களாகக் குறிப்பிடலாம்.
4. குறிப்பிட்ட இவ்வேட்டிறுதியில் அமைந்துள்ள, இதனின்று வேறுபட்ட, தனி ஏடாக மதிக்கப் பெறாத துணுக்குச் செய்திகளைப் பற்றிய குறிப்பு.
5. ஏட்டில் இன்னவைபற்றி இயம்பப்பட்டுள்ளன என்ற குறிப்புத் தரல்.
6. தலைப்பொத்த சுவடிகள் ஒப்புமை அல்லது வேற்றுமை உடைய தாயின் குறிப்பிடல் என்ற இவற்றை சான்று களாகக் கூறலாம்.

அறிந்த சில செய்திகள்

சுமார் 1000—க்கும் மேற்பட்ட சுவடிகளைப் படித்துப் பார்த்ததில், இவை குறித்து அறிந்த சில கருத்துகள் பயனுள்ளவையாக இருக்கும் எனக் கருதிக் கீழே தரப்படுகின்றன.

1. ஏடுகளில் அகச் சான்றுகளாகக் காணப்படும் குறிப்புகள் கொண்டு, தமிழக ஊர்களைச் சேர்ந்த (கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரைமாவட்டங்கள். இதில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்கள் மிகுதி) சுவடிகள் இவை என்பது தெரிய வருகின்றது.

2. தமிழ் எழுத்து + தமிழ் மொழி
மலையாள எழுத்து + ,,
தமிழ் எழுத்து + மலையாள மொழி
கிரந்த எழுத்து + தமிழ்மொழி
தெலுங்குஎழுத்து + ,,
சமஸ்கிருத எழுத்து + ,,
என்ற முறையில் சுவடிகள் எழுதப் பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

3. காலத்தால் மிக முந்தைய ஏடு அகத்தியர் திரட்டு 8811 (தேவாரம்) என்பதாகும். இது கி. பி. 1731 இல் எழுதப் பட்டுள்ளது. அதாவது 251 ஆண்டுகட்கு முற்பட்ட து.

4. காலத்தால் மிகப் பிந்தைய ஏடு அகஸ்தியர் சூத்திரம் முன்னூற்றிருபத்தைந்து —3794 என்பதாம். இது கி. பி. 1942-இல், அதாவது 40 ஆண்டுகட்கு முன் எழுதப்பட்டது.

5. அதிக இதழ்கள் கொண்ட பெரிய ஏடு — அசுவமேதயாகக் கதை-5651. இதில் 387 இதழ்கள் உள்ளன.

6. குறைந்த இதழ்கள் கொண்ட சிறிய ஏடு — நந்தீசர்கல்ப சூத்திரம்-8936-c. இதில் ஒரு இதழில் ஒரு பக்கம் மட்டுமே எழுதப்பட்டுள்ளது.

7. மிக நீளமான ஏடு — ஆதார பத்திர நகல்கள், கடன் முறி முதலானவை -3769. இது 58.1 செ.மீ நீளமுடையது.

8. நீளம் குறைவான ஏடு — இடைக்காடர் சூத்திரம்- 11559-d இது 11 செ.மீ. நீளமுடையது.

9. அதிக அகலம் கொண்ட ஏடு—அமிர்த மதன நாடகம்-8227. இது 6.1 செ.மீ அகலங் கொண்டது. (இது பனை ஓலையில் அமைந்த ஏடாக இருப்பினும், பொதுவாகத் தாளிப்பனை ஏடுகளே அகலமுடையவை)

10. குறைந்த அகலம் கொண்ட ஏடு—சட்டைநாதர் ஊசல் —9360. இது 2.4 செ.மீ அகலமுடையது.

11. பெரிய எழுத்துகள் உள்ள ஏடாக, எண்ணைச் சிந்து —11323 என்ற ஏட்டைக் குறிப்பிடலாம்.

12. சாமுத்திரிகா லட்சணம் எழுதப்பட்டுள்ள சுவடிகள் (11243, 11249) பெரும்பான்மையும் நுண்ணிய எழுத்துகளால் எழுதப்பட்டுள்ளன. (நுண் பெருக்கி கொண்டு படித்தலும் சிரமமே.)

13. பனை ஓலையைக் காட்டிலும் தாளிப்பனை ஏடுகள் கன் முள்ளவைகளாக இருக்கின்றன. (இராமதேவ சூத்திரம்-6683)

14. பனை ஓலை, தாளிப்பனை ஓலை என்ற இருவகை ஏடு களில் பனை ஓலையில் எழுதப்பட்ட சுவடிகளில் உள்ள எழுத்துகளே தெளிவாக உள்ளன.

15. பொதுவாக ஏடுகள் அனைத்தும் ஹரிஓம், நன்றாக எனத் (ஏட்டின் இடது ஓரப் பகுதியில்) தொடங்குவதைக் காண முடிகின்றது.

16. அனைத்துச் சுவடிகளிலும் இதழ் எண்ணிக்கையே குறிப்பிடப் பட்டுள்ளது. பக்க எண் அன்று, இதில் முதல் இதழில் பிள்ளையார் சுழி எனும் 'உ' எனத் தொடங்கி அடுத்து ''ங (மூன்று) எனப் படி செய்தவர் பிள்ளையார் சுழிக்குரிய 'உ' என்பதினை 2 என்ற எண்ணாகக் கருதிய தவறால் நிகழ்ந் திருக்கலாம். இரண்டாம் இதழைக் குறிப்பிட்டுத் தொடர்ச்சி யாக எண் இட்டுக்கொண்டு சென்றிருத்தலும் உண்டு (சர்வார்த்த சிந்தாமணி—8209). இதனுல் இறுதி இதழின் எண்ணிக்கையை மட்டும் மனதில் கொண்டு குறிப்பிட்ட ஏடு இத்தனை இதழ்களை உடையது எனக் கணக்கிடல் தவறாக முடியும்.

17 ஏடுகளில் பாடல்கள் 3 முறைகளில் எழுதப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

(1) இடைவெளி ஏதுமின்றித் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டு செல்லல்.

(2) பாடலின் ஒரு வரி முடிந்ததை உணர்த்த-என்ற சிறுகோடு இடல்.

(3) பாடலை வரி வரியாகப் பிரித்து எழுதி, இறுதி எழுத்தைத் தனியாக எழுதல் அதாவது.

.... } என அமையும்.
....

இது வரி ஒழுங்கில் ஓர் அழகையும், ஏட்டு இட நிரப்புகையில் ஒரு முழுமையையும் தருவதாக அமைந்துள்ளது.

18. ஒரு பாடலின் தொடக்கத்திலன்றி, பாடல் முடிவில் எண் இடலை அனைத்து ஏடுகளிலுமுள்ள பொதுத் தன்மையாகக் காணமுடிகின்றது.

19. மந்திரம் குறித்த சுவடிகளில் சாத்தான் (வசியமந்திர யந்திரங்கள் 8880-d) மந்திர எழுத்துகளுடன் கூடிய "சக்கரங்கள்' சாத்தான், தெய்வப்படங்கள், மாட்டுவைத்தியம் பற்றிய ஏடுகளில் சூடு இடும் முறைகள் போன்றவற்றின் படங்கள் வரையப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. ஏட்டில் ஓவியக்கலை பெற்ற இடம் கவனித்தற்குரியதாகவே உள்ளது.

20. நீட்டுதல், சுழித்தல் என்ற இருமுறைகளில் மிகையைக் கையாண்டு எழுத்துகளுக்கு அழகூட்டவும் முயன்றிருக்கின்றனர். (புலிப்பாணி ஐந்நூறு -8852-a, திருப்பதி அடைவு-8221-a)

21. படி எடுப்பின்போது இடைச் செருகலும் விடுகையும் நிகழ்ந்தமையை அறிய முடிகின்றது. அகத்தியர் சூத்திர மறுநூறுக்குச் சூத்திரம் அறுபது -9036-b என்ற சுவடியில் 67 பாடல்கள் உள்ளன. 7 பாடல்கள் இடைச்செருகல்கள். படி எடுத்தவர் தாமாக இவற்றை எழுதிச் சேர்த்தார் எனக் கொள்ள இடமுள்ளது. இதுபோல் விடுகைக்குச் சான்றாக அகத்தீசர் இருநூற்றைந்து (-6209-a) என்ற சுவடியில் 190 பாடல்கள் மட்டுமே உள்ளதைக் குறிப்பிடலாம்.

22. ஒன்றின் மேற் பிரதிகள் யார் யாரிடம் உள்ளன எனக் குறிப்பிடலும் உண்டு. சான்றாக தட்சிணாமூர்த்தி சுருதிஸார வாக்கிய ஸம்பரதாயம் -11235-c என்ற சுவடியின் இறுதியில் உள்ள,

''இதற்கு மேற்பிரதி மலையாளம் பிள்ளையிடத்திலொன்று, திருநெல்வேலி சுப்பிரமணிய முதலியாரிடத்திலொன்று. மாணிக்கவாசகங் கவிராசரவர்களிடத்தி லொன்றிருக்கிறது. மதுரை ராமஸ்வாமி வித்தியார்த்தியிடத்திலும் இருக்கிறது'' என்ற குறிப்பால் உணரலாம்.

23. பல ஏடுகளில் இந்த ஏட்டை வாசித்தவர் இன்ன பயன் அடைவர் என்றும், இதற்கு ஊறு செய்பவர்அல்லது எடுத்துப் படித்துவிட்டு, அல்லது படி செய்துவிட்டுக் கொடுக்காதவர் இன்ன தண்டனை அடைவர் என்ற குறிப்பும் காணப்படுகின்றது. இது பெரும்பான்மையும் கல்வெட்டுகளின் இறுதியில் காணப்படல் போல, கங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவம் வந்தடையும் என்பதை ஒத்ததே (சான்று : முருகன் அந்தாதின் (9097-a)-"எடுத்தவன் பார்த்துப் போட்டு இருந்த இடத்தில் வைத்திடணும். வையாமல்

எடுத்துக் கொண்டு போனவன் காராம்பசுவைக் கொன்ற பாவத்தில் போவான்'' என்பதாக அமைகின்றது.

24. ஏட்டினை இன்னாருக்குக் (ஈகை, நற்செய்கை, நற்பாக்கியம் நற்குலம், நற்புத்திஉடையவன்) கொடுக்க வேண்டும். இன்னவருக்குக் கொடுக்கக் கூடாது. கொடுத்தால் இன்னது ஆகும். (இராமதேவர் பக்ஷிணி, 8880-a) ''பசுக்களுக்கு என்னூலை யீந்தால் அந்திரயிடி விழுந்து தலை வெடிக்கும்''), ஏட்டினை எப்படிப் பாதுகாத்து (பூசை முதலியன செய்தல்), எப்படிப் படித்துப் பார்க்க வேண்டும் (சிதம்பரச் சித்தர் தரவு (6295-a). ''இந்த அட்டவணை கண்டவர் ஒளித்து வைத்துப் பார்க்கவும்'' என்ற குறிப்பு களையும் ஏட்டிறுதியில் காண முடிகின்றது.

25. மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடாது ஏட்டில் எழுதியதற்கு முக்கிய காரணமாக அனைவரும் இயம்புவது ஏடு கிழியும் என்பதால் புள்ளி வைக்கவில்லை என்பதாகும். ஒன்றுக்குப் புள்ளியிட்டு எழுதப்பட்டுள்ள ஏடுகளையும் காண முடிந்தது. அவை நன்முறையிலேயே இருப்பதையும் அறிய முடிந்தது. .0 என்ற இருமுறையில் புள்ளி இடப்பட்டுள்ளது ெ. ே. ா,ர இவை வேறுபாட்டுடன் எழுதப்பட்ட சுவடிகளும் உள்ளன. இவை காலத்தால் பிற்பட்டவை ஆகலாம்.

26. மருந்துப் பொருளின் பெயர் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந் ததையும் காண முடிந்தது. (நானாவிதமருந்து- -7931- bromide of potassium)

27. ''கத்துக் குட்டிகள்'' எனப்படும் ஓலையில் எழுதிப்பழகுப வர்கள் எழுதிய நடுநரம்பை நீக்காத இரு ஓலையில் அமைந்த ஏடுகளும் உள்ளன. இதழின் மறுபுறம் எழுதாமை இத்தகு ஏடுகளின் சிறப்புத்தன்மையாகும். (சான்று: ஆதார பத்தி ரங்கள், கடன் முறி முதலானவை -3769)

28. இந்த 1091 சுவடிகளில் அமிர்த மதன நாடகம் -8227 என்ற ஒரு சுவடி மட்டும் 'நீலாய தாக்ஷி' என்ற ஒரு பெண்ணால் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இரா. நிர்மலாதேவி

திருவனந்தபுரம்

தமிழ்ச் சுவடிகள்

அட்டவணை

வரிசை எண் (1)	நூலின் பெயர் (2)	சுவடி எண் (3)	ஏடுகள் (4)
1	அகண்ட வாக்கியம்	6402-o	9
2	அகத்தியர் அகராதி நிகண்டு	11263	24
3	அகத்தியர் ஆயிரத்திருநூறு	8868-c	17
4	அகத்தியர் இரத்தினச் சுருக்கம்	11160	144
5	,, ,, ,,	3239-a	12
6	அகத்தியர் இருநூற்றைந்து	5909-g	16
7	அகத்தியர் இருபத்தொன்று	6209-b	5
8	அகத்தியர் எண்பது	8866-a	21
9	அகத்தியர் ஏழுகாண்டம்	6339	83
10	அகத்தியர் ஐம்பது	8836-g	6
11	அகத்தியர் கர்ணக்கோள்	8850-g	13
12	அகத்தியர் கர்ப்ப சூத்திரம்	9104-c	6
13	அகத்தியர் கர்ம காண்ட சூத்திரம்	8851-b	59
14	அகத்தியர் கர்ம காண்டம் நடுக்காண்டம் முந்நூறு	8846-b	53
15	அகத்தியர் கர்ம சூத்திரம் நூற்றைம்பது	8846-d	16
16	அகத்தியர் கருமானம்	6213-a	115
7	அகத்தியர் கலைஞானம்	7311-a	25
18	அகத்தியர் கலைக்கியானம் ஆயிரத் திருநூறு	9192	155
19	அகத்தியர் காயசித்தி ஞானம்	6218	22

அளவு செ.மீ. (5)	நிலை (6)	செய்யுள் எண்ணிக்கை (7)	குறிப்புக்கள் (8)
19.6×2.4	நன்று.முழுமை	51	வேதாந்தம்
30.5.×4.1	சிதைவு.குறை	உரைநடை	
30.8×3	நன்று.குறை	77	மருத்துவம்
20.1×3.8	நன்று.குறை	586	,,
19×2.5	சிதைவு.குறை	23	,,
30.6×3.8	நன்று.குறை	96	,,
29.1×3.5	நன்று.குறை	15	,,
16.3×3	சிறு சிதைவு. முழுமை	80	,,
36.2×4	சிதைவு.முழுமை	700	,,
40.6×3.1	நன்று.முழுமை	50	,, அத்திக்கடை தெய்வராய சுவாமிகள் குமாரன் துரை சாமியாபிள்ளை சாத்திரம்
22.5×3.2	நன்று.குறை	48	மருத்துவம்
26×2.8	சிதைவு.முழுமை	16	,,
ʒ4.7×2.8	நன்று.குறை	270	,,
34·3×3.1	நன்று.குறை	279	,,
34.5×3.2	நன்று.முழுமை	151	,, அக்ஷய வருடம் மாசு மாதம் 21 ஆம் தேதி ஞாயிற்றுக் ஏகாதசி, அமிர்த யோகம், ஆவணம் அய்யா உடையார் மச்சினன் விராசாமி உடையார் எழுதியது.
22.2×.3	சிதைவு.முழுமை	உரைநடை	மருத்துவம்
30.9×3.6	சிதைவு.குறை	114	யோகம்
23.5×3.2	நன்று.குறை	1200	சுவடி எண் 2135 உடன் ஒத்துள்ளது:
35.7×.2.8	நன்று.முழுமை	100	மருத்துவம் சுவடி எண் 6428 உடன் ஒத்துள்ளது.

(1)	(2)	(3)	(4)
20	அகத்தியர் காயசித்தி ஞானம் நூறு	6428	35
21	அகத்தியர் காவியச் சுருக்கம்	9264-a	10
22	அகத்தியர் குருநாடி	5909-b	18
23	அகத்தியர் குருநூல் அறுநூறு	8826-a	79
24	அகத்தியர் குழம்பு	6402-j	2
25	அகத்தியர் சகல கருமானம்	5912-a	256
26	அகத்தியர் சரக்குசுத்தி நூற்றைம்பது	8836-g	15
27	அகத்தியர் சமாதிச் சுருக்கம்	8207-a	9
28	அகத்தியர் சூத்திரம்	3231-a	54
29	அகத்தியர் சூத்திரம்	8851-c	17
30	அகத்தியர் சூத்திரம் நூறு	9036-a	19
31	அகத்தியர் சூத்திரம் அறுநூறுக்குச் சூத்திரம் அறுபது	9036-b	10
32	அகத்தியர் சூத்திரம் ஆயிரத்திருநூறு	7311-b	166
33	அகத்தியர் சூத்திரம் ஒன்பது	6354-h	2
34	அகத்தியர் சூத்திரம் நாற்பத்தெட்டு	6592-b	16
33	அகத்தியர் சூத்திரம் நூற்றைம்பது	8836-h	17

(5)	(6)	(7)	(8)
22×3.2	சிறு சிதைவு.குறை	94	மருத்துவம்
14.9.×2.6	சிதைவு.முழுமை	15	,,
30.6.×3.8	நன்று.முழுமை	110	,,
36×3.15	நன்று.முழுமை	624	,, பற்பம், சூரணம், கேசரிக் குளிகை, பதங்கம், தைலம் போன்ற செய்முறைகள்
19.6×2.4	,, ,,	,,	மருத்துவம்
26.6×3	சிறுசிதைவு.முழுமை	1200	திடாகம் வெங்கடாசல முதலியார் குமாரன் சின்னத் தம்பி முதலியார் நல்லூர் முத்துக் குமார முதலியாருக்காக எழுதியது.
40.6×3	நன்று.முழுமை	151	மருத்துவம்.
27.1×3.7	நன்று.முழுமை	51	வேதாந்தம்.
24.1×2.9	நன்று.குறை	209	மருத்துவம்.
24.5×2.6	நன்று.முழுமை	60	,,
32×3.4	சிறு சிதைவு ,,	100	இதனை அடுத்து யூகிமுனி வாக்கியம் இரு ஒலைகளில் உள்ளது.
30,6×3.1	,, ,,	67	மருத்துவம்
31×3.8	சிதைவு.குறை	1006	,, 1005 ஆம் ஆண்டு (கி.பி. 1830) ஆடி 14 ஆம் தேதி சங்கரன் ஞானி எழுதியது.
38.3×3	நன்று.முழுமை	9	மருத்துவம்
28×2.8	சிதைவு.முழுமை		,,
40.7×3.4	நன்று.முழுமை	120	எண்ணெய், தைலம், சுண்ணம்,மெழுகு, கற்பம் தயாரிப்பு முறைகள் உள்ளன.

(1)	(2)	(3)	(4)
36	அகத்தியர் சூத்திரம் நூற்றைம்பது	8856-c	33
37	,,	8877	22
38	அகத்தியர் சூத்திரம் நூறு	6215	26
39	,,	6281	28
40	,,	9036-a	19
41	அகத்தியர் சூத்திரம் பதினாறு	6591-a	4
42	அகத்தியர் சூத்திரம் பதினாறு	5912-b	4
43	அகத்தியர் சூத்திரம் பதினான்கு	8483-e	5
44	அகத்தியர் சூத்திரம் முப்பத்தாறு	6591-a	4
45	அகத்தியர் சூத்திரம் முந்நூற்றிருபத்தைந்து	3794	91
46	அகத்தியர் செந்தூரம் முந்நூறு	8816-c	38
47	அகத்தியர் ஞானத்திரட்டு	7311-c	4
48	அகத்தியர் ஞானம் நூறு	8088-j	9
49	அகத்தியர் தீட்சா விதி	6438-a	34
50	அகத்தியர் தேவாரத் திரட்டு	8811	175
51	,, ,, ,,	10298-a	28
52	,, ,, ,,	4110-c	29
53	,, ,, ,,	3258	36

(5)	(6)	(7)	(8)
20.9×2.9	நன்று.முழுமை	151	மருத்துவம்.
			,,
27.3×2.7	,, ,,	150	ரங்கசாமியா பிள்ளை எழுதியது
30.1×3.2	சிதைவு.முழுமை	100	மருத்துவம் கொல்லம் ஆண்டு 1074இல் (கி.பி. 1899) எழுதியது.
19.7×3.5	சிறுசிதைவு.முழுமை	100	மருத்துவம்
32×3.4	,, ,,	100	,,
25.5×3	சிதைவு.முழுமை	16	,,
26.8×3.2	நன்று.முழுமை	16	யோகம்
23.8×2.8	நன்று.முழுமை	14	யோகம் கும்பமுனி சுருக்கம் குறித்து ஒரு ஏட்டில் எழுதப் பட்டுள்ளது.
25.5×3	சிதைவு.முழுமை	—	—
22×2.7	,, ,,	325	மருத்துவம்.கொல்லம் 1117 (கி.பி.1942) எழுதியது.சுப்பராயர் குமாரன் மீனாட்சி சுந்தரமய்யன் சாத்திரம்
27×4.2	நன்று.குறை	269	மருத்துவம்
30.3×4.1	சிதைவு.குறை	29	ஞானம்
30×4	நன்று.முழுமை	269	மருத்துவம்
22.5×3.4	சிதைவு.முழுமை	201	994 ஆண்டு (கி.பி. 1819) ஆடி 23 ஆம் தேதி சேருவை மகன் அருணாசலம் எழுதியது
22.2×3.4	,, ,,		மூவர் தேவாரம்
14.7×3.7	சிதைவு.முழுமை	263	,,
15.4×3.6	நன்று.முழுமை	253	,,
24.5×3.5	,, ,,	250	,,

(1)	(2)	(3)	(4)
54	அகத்தியர் தேவாரத்திரட்டு	9224	38
55	அகத்தியர் நட்டாமுட்டி	8881-a	8
56	,, ,,	8881-a	8
57	அகத்தியர் நவகிரக கக்கிசம்	9117-b	34
58	அகத்தியர் நாடி நிதானம்	8199-b	28
59	அகத்தியர் நிகண்டு	6354-m	17
60	அகத்தியர் நூற்றைம்பது	6268-b	16
61	அகத்தியர் பரிபாஷை ஐந்நூறு	6255	73
62	,, ,,	6723-a	100
63	அகத்தியர் பலதிரட்டு	6354-k	2
64	அகத்தியர் பன்னிரண்டு	6228-d	4
65	அகத்தியர் புனை சுருட்டு	8881-b	6
66	,, ,,	8881-b	6
67	அகத்தியர் பூசைவிதி	7975-a	37
68	அகத்தியர் பூரண காவியம்	6248	109
69	அகத்தியர் பூரண சூத்திரம்	4071	99
70	,, ,,	9117-a	74
71	அகத்தியர் பூரண சூத்திரம் இருநூற்றுப் பதினாறு	8088-c	36
72	அகத்தியர் பெருநூல்	3233-a	124
73	அகத்தியர் மதிவெண்பா	8836-a	7
74	அகத்தியர் முதற்காண்டம் முந்நூறு	6206	38
75	அகத்தியர் முந்நூறு	6219	112
76	அகத்தியர் முப்பத்தாறு	6577-a	9

(5)	(6)	(7)	(8)
22.2×2,9	சிதைவு.குறைவு	—	மூவர் தேவாரம்
21×3.5	நன்று.முழுமை	31	மருத்துவம்
21×3,6	நன்று.முழுமை	31	மருத்துவம்
24.2×2.4	,, ,,	100	சோதிடம்
37×3.7	,, ,,?	91	மருத்துவம்
38×3.3	,, ,,	117	,,
25.2×3.5	நன்று.முழுமை	151	மருத்துவம்
29.2×4	,, ,,	502	,,
24.1×2.9	சிதைவு.முழுமை	500	,, 1117 ஆம் ஆண்டு (கி. பி. 1942) ஐப்பசி மாதம் எழுதியது
38.4×3	நன்று.குறை	21	மருத்துவம்
18.7×3.9	நன்று.முழுமை	12	,,
21×3.5	,, ,,	18	,,
21×3.6	,, ,,	8	,,
22.8×4.6	,, ,,	200	யோகம். கேரள லிபி
34.4×3.8	நன்று.குறை	776	மருத்துவம்
27.9×2.6	நன்று.குறை	—	,,
24×3	நன்று.முழுமை	216	,,
௬0×4.1	,, ,,	218	,,
18.2×3.2	சிறுசிதைவு முழுமை	303	,, அகத்தியர், திருமூலர், போகர், சூதமுனி ஆகியோரது சூத்திரங்கள் அடங்கியது.
40.7×3.2	நன்று.முழுமை	101	மருத்துவம்
29.5×3.4	சிதைவு.முழுமை	300	,,
31.9×3.2	சிதைவு.முழுமை	301	,,
22×3	நன்று.குறை	31	,,

(1)	(2)	(3)	(4)
77	அகத்தியர் முப்பது	6228-c	7
78	அகத்தியர் முப்பூ ஐம்பது	11559-a	17
79	அகத்தியர் முனி அதீத சூத்திரம் முப்பத்திரண்டு	8088-g	4
80	அகத்தியர் மூர்த்தி வெண்பா	11158-e	8
81	அகத்தியர் யோகம் பதினான்கு	11158-d	6
82	அகத்தியர் லோக நீதி	8483-h	4
83	அகத்தியர் லோகநீதி பதினாறு	6402-e	5
84	அகத்தியர் வாகட சாத்திரம்	6268-a	136
85	அகத்தியர் வைத்தியச் சுருக்கம் நூற்றிப் பதினாலு	8866-e	23
86	அகத்தியர் வைத்திய சூத்திரம்	6257-b	29
87	அகத்தியர் வைத்திய சூத்திரம் எண்ணூறு	8830-a	133
88	அகத்தியர் வைத்திய சூத்திரம் முப்பத்தைந்து	6262-a	12
89	அகத்தியர் வைத்தியத் திரட்டு	6249-a	72
90	,, ,,	6592-a	36
91	அகத்தியர் வைத்தியம்	9090	153
92	,, ,,	11156-a	36
93	அகத்தியர் வைத்தியம் (கலைக்கியானம்)	2135	105
94	அகத்தியர் வைத்தியம்	3212-b	40
95	அகத்தியர் வைத்தியம் அறுநூறில் நாடி	9039-a	6
96	அகத்தியர் வைத்தியம் ஐம்பது	8088-e	9

(5)	(6)	(7)	(8)
18.7×3.8	நன்று.முழுமை	30	,,
11×2.7	நன்று.முழுமை	49	மருத்துவம்
30×4	,, ,,	32	வசியம், லேபனம், திலத மோகனம், விஷப்பார்வை, சகல விஷ மருந்து அடங்கியது.
21.3×4	,, ,,	18	மருத்துவம்
21.2×3.9	,, குறை	11	,,
23.4×2.8	நன்று.முழுமை	16	வேதாந்தம்
19.6×2,4	,, ,,	16	,,
25.6×3.4	,, ,,	விரவியது	மருத்துவம்
16.3×3	நன்று.முழுமை	79	மருத்துவம்
25.6×3.4	,, ,,	65	,,
34.4×3	நன்று.குறைவு	—	,,
20.4×3.3	,, முழுமை	35	,,
33×2.9	நன்று.குறை	விரவியது	பிளவை மருந்து, நாடி நிதானம், சன்னி போன்ற வற்றிற்கு மருந்து. இறுதி இரு பக்கங்களில் திருப்பள்ளி எழுச்சி உள்ளது
28×2.8	சிதைவு.முழுமை	—	மருத்துவம்
16.9×3	சிறு சிதைவு.குறை	200	,,
33.5×3	சிதைவு.குறை	167	,,
36.5×3.3	சிறுசிதைவு.குறை	1209	மருத்துவம்
24.8×3.4	நன்று.குறை	—	,,
36.1×4	,, ,,	89	,,
30×4	சிதைவு.குறை	49	,,

(1)	(2)	(3)	(4)
97	அகத்தியர் வைத்தியம் ஐம்பது	5909-g	12
98	,, ,,	8088-c	9
99	அகத்தியர் வைத்தியம் நூற்றைம்பது	6591-b	21
100	அகத்தியர் வைத்தியம் முந்நூறு	8846-e	58
101	அகத்தியர் ஜாலத் திரட்டு	3916	177
102	அகத்தீச மாமுனி சூத்திரம் பதினாறு	4062-n	3
103	அகத்தீசர் அறுபது	6228-b	17
104	அகத்தீசர் இருநூற்றைந்து	6209-a	32
105	அகத்தீசர் ஞானம்	7975-b	19
106	அகத்தீசர் தத்துவம் தொண்ணூற்றாறு	6223-c	7
107	அகத்தீசர் தீட்சை விதி	5912-c	4
108	அகத்தீசர் பதினாறு	4062-p	3
109	அகத்தீசர் வைத்தியம் ஆயிரத்தைந்நூறு	1263-a	209
110	அகத்தீசர் வைத்தியம் ஆயிரத்தைந்நூறு	7952	222
111	அகத்தீசுவர சுவாமி ஐம்பது	8850-e	13
112	அகத்தீசுவரர் ஐம்பது	5909-h	12
113	அகத்தீசுவரர் சூத்திரம்	6268-c	9
114	அகத்தீசுவரர் சூத்திரம் எட்டு	4062-m	3
115	அகத்தீசுவரர் பூசை விதி	5912	4

(5)	(6)	(7)	(8)
30.6×3.8	சிதைவு.முழுமை	50	மருத்துவம்
29.9×3.5	நன்று.குறை	49	,,
25.5×3	சிதைவு.குறை	—	,,
34.5×3	சிதைவு.முழுமை	301	மருத்துவம்
34.5×3 .5	நன்று.முழுமை	1196	மருத்துவம், வாதம், இந்திசாலம், மந்திர சாலம் அடங்கியது. 1041 ஆம் ஆண்டு (கி.பி. 1866) ஆனி 3 ஆம் தேதி சுரண்டை சிவக் கொழுந்து பிள்ளை எழுதியது
31.9×3.7	நன்று.முழுமை	14	இரசவாதம்
18.8×3.8	சிதைவு.முழுமை	59	மருத்துவம்
29.3×3.6	நன்று.முழுமை	190	,,
22.8×4.6	,, ,,	200	ஞானம்.கேரள லிபி
18.6×3.8	சிறுசிதைவு.முழுமை	உரைநடை	யோகம்
26.7×3.1	நன்று.முழுமை	17	யோகம்
31.9×3.7	சிதைவு.முழுமை	17	மருத்துவம் 1000 ஆம் ஆண்டு (கி.பி. 1825) மார்கழி 15 ஆம் தேதி எழுதியது
30.7×4.3	சிறுசிதைவு.முழுமை	1551	மருத்துவம் 991 ஆம் ஆண்டு (கி.பி.1816) கார்த்திகை மாதம் எழுதியது
37.2×33	,, குறை	1611	மருத்துவம்
22.5×3,2	நன்று.முழுமை	50	,,
30.6×3.8	,, ,,	50	,,
25.2×3.5	,, ,,	49	,,
31.9×3.7	நன்று.முழுமை	10	இரசவாதம். 1000 ஆம் ஆண்டு (கி.பி. 1825) மார்கழி மாதம் எழுதியது
26.8×3.1	சிதைவு.முழுமை	16	சைவ சமயம்

(1)	(2)	(3)	(4)
116	அகப்பைச் சித்தர் பாடல்	6402	4
117	அகராதி நிகண்டு	7920	113
118	,,	9136	37
119	அங்கதன் தூதுப் படலம் (கம்ப.)	4095-b	12
120	அங்கயற்கண்ணம்மை பொன்னூசல்	9217	6
121	அங்காளம்மன் தாலாட்டு	9178-b	6
122	அசுவமேதக் கதை	5949	257
123	அசுவமேதயாகக் கதை	5651	387
124	,,	6183	261
125	,,	8181	371
126	,,	8412	232
127	அட்டகர்ம குளிகை ஆதி	9222-g	6
128	அட்டகருமம்	8866-h	10
129	அட்டவர்க்க மாதி	11430	84
130	அட்டவர்க்க வகை	6346-g	23
131	அடுக்குநிலை போதம்	8483-b	10
132	அண்ணாமலை வெண்பா	8421-g	1
133	அணியாபரண நல்லூர் மீனாட்சிபட்டி உரிமை வழக்கு	8142	98
134	அத்வைதானுபவம்	3947-e	13
135	அதிகார சங்கிரகம்	5761	5
136	அம்பிகை மாலை	7834	9
137	அம்மானைகள்	11545-c	5

(5)	(6)	(7)	(8)
30.3×4.1	சிதைவு.குறை	29	வேதாந்தம்
34.8×3.1	நன்று.முழுமை	உரைநடை	—
38.8×3	சிதைவு.குறை	,,	—
29.6×3.3	நன்று.முழுமை	43	காவியம்
33.5×2.8	நன்று.குறை	7	சிற்றிலக்கியம்
32×2.5	சிறு சிதைவு.குறை	—	—
40.2×3.5	நன்று.முழுமை	உரைநடை	30.9.1115 (கி.பி. 1940) அன்று எழுதியது
40.4×3.4	,, ,,	,,	—
39.3×3.3	,, குறை	,,	—
48×3.6	சிறுசிதைவு.குறை	,,	—
43.2×3.7	நன்று.முழுமை	,,	—
20,5×3.2	நன்று.குறை	—	மந்திரம்
16.2×2.9	,, ,,	உரைநடை	மருத்துவம்
18.5×2.8	,, ,,	விரவியது	சோதிடம்
31.8×3.3	நன்று.முழுமை	விரவியது	சோதிடம்
22.6×2.8	நன்று.முழுமை	,,	மாணிக்கவாசகர் இயற்றியது
24.8×2.8	,, ,,	7	—
20×3	,, ,,	உரைநடை	வரலாறு
41.4×3.5	,, ,,		ஞானம்
40.2×3.8	,, ,,	40	வைணவ நூல்
40.4×2.6	,, ,,	30	சிற்றிலக்கியம்
28.7×3.2	சிதைவு.குறை	38	,,

(1)	(2)	(3)	(4)
138	அமிர்த போதகம்	8483-g	52
139	அமிர்த மதன நாடகம்	8227	53
140	அய்ய நயினார் கலைக்கியான சூத்திரம்	4062-a	14
141	அரிச்சந்திரன் நாடகம்	6686-b	127
142	அரியலூர்ப் பள்ளி வில்லிப் படையாண்டார் கதை	6242	7
143	அவதூதர் ஞான பூரண சூத்திரம்	8141-d	8
144	அவிநாசி மாலை	7834	9
145	அவுஷதா உல்லாசம்	6378-c	7
146	அழுகண்ணி நாயன் சூத்திரம்	11559-n	8
147	அறுபத்துநாலு மூலிகை செய் விபரம்	8892-b	5
148	அறுபது வருடப் பலன்	6693-c	9
149	,, ,,	9200	26
150	அனகன் பெருமாள் கதை	6715	73
151	அனாதி மவுனம்	9264-c	8
152	அனாற்பர விவேகம்	6349-a	61
153	அனுட்டான விதி	2129-c	12
154	ஆசாரக் கோவை தெரி செய்யுள்	6417	6
155	ஆத்ம தத்துவ விசாரம்	7318	40
156	ஆத்ம போதம்	6354-a	19
157	ஆதார பத்திர நகல்கள் கடன் முறி முதலானவை	3769	30

(5)	(6)		(7)	(8)
1 3.8×3	நன்று.முழுமை		151	மருத்துவம்
29.7×6.1	,,	,,	617	1007 ஆம் ஆண்டு (கி. பி. 1832) ஆனி 29 ஆம் தேதி எழுதி முடிக்கப்பட்டது.
31.6×3.7	,,	,,	104	1002 ஆம் ஆண்டு (கி.பி 1827) ஆனி 29 ஆம் தேதி எழுதி முடிக்கப்பட்டது.
29.5×2.9	சிதைவு	,,	—	11—11—1117 (கி.பி. 1942) இல் எழுதப்பட்டது.
34.4×3	நன்று.முழுமை		—	வரலாறு.
22.4×3.2	,,	குறை	48	யோகம்
40.4×2.6	,,	,,	8	சிற்றிலக்கியம்
26.3×3.1	சிதைவு.முழுமை		29	வேதாந்தம்
11.1×2.9	நன்று	,,	151	மருத்துவம்
27.5×2.8	,,	குறை	உரைநடை	,,
35×2.7	மிகுசிதைவு ,,		,,	,,
35×2.7	சிறுசிதைவு.முழுமை		,,	,,
2×3.3	,,	,,	,,	—
15×2.7	நன்று.குறை		12	வேதாந்தம்
28.2×3	,,	முழுமை	உரைநடை	,,
12.6×3.4	நன்று.முழுமை		உரைநடை	சைவ சமயம்
25×3	,,	,,	50	பதினென் கீழ்க்கணக்கு நூல்களுளொன்று
20×2.9	சிறுசிதைவு ,,		உரைநடை	சைவ சமயம்
8.2×2.9	நன்று	,,	,,	வேதாந்தம்
58.1×3.7	சிறுசிதைவு ,,		,,	—

(1)	(2)	(3)	(4)
	மையன் கதை	8423	11
159	ஆருடம் நன்றோ தீதோ	10551	84
